# செய்திக்குறிப்பு

புதுவை அரசு புயலால் ஏற்பட்ட சேதங்களுக்காக வேளாண் துறை மூலம் விவசாயிகளுக்கு, நெல், மணிலா, மரவல்லி, கரும்பு, வாழை, தென்னை, முந்திரி, சவுக்கு, வெற்றிலை, பயிர் வகைகள், காய்கறி, பழத்தோட்டம் மற்றும் பூச்செடிகள் ஆகியவற்றின் மொத்த சேதம் 8405.78 ஹெக்டாராக இதுவரை கணக்கிடப்பட்டு நிவாரணத் தொகையாக ரூ.18,11,47,495/- புதுவை பிராந்தியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காரைக்கால் பகுதிக்கு நெல், காய்கறி, வாழை மற்றும் மணிலா பயிற்களின் மொத்த சேதமாக இதுவரை 5084.76 ஹெக்டாராக கணக்கிடப்பட்டு நிவாரணத் தொகையாக ரூ.10,17,30,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சேதமடைந்த வீடுகளுக்கு வருவாய் துறை மூலமாக புதுவை மற்றும் உழவர்கரை தாலுக்காவிற்குட்பட்ட முழுவதும் சேதமடைந்த வீடுகள், மிகவும் சேதமடைந்த வீடுகள் மற்றும் குடிசைகள் என்று 24221 இதுவரை கணக்கிடப்பட்டு இதற்கான நிவாரணத் தொகை ரூ.25,08,60,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வில்லியனூர், பாகூர் பகுதிக்குட்பட்ட சேதமடைந்த வீடுகள் மற்றும் குடிசைகள் 26,635 என்று இதுவரை கணக்கிடப்பட்டு இதற்கான நிவாரணத் தொகையாக ரூ.26,65,55,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல், புதுவை மற்றும் உழவர்கரை

தாலுக்காவிற்குட்பட்ட பகுதி சேதமடைந்த வீடுகள் 18,594 என்றும், வில்லியனூர், பாகூர் தாலுக்காவிற்குட்பட்ட பகுதி சேதமடைந்த வீடுகள் 19,155 என்றும் இதுவரை கணக்கிடப்பட்டு நிவாரணத் தொகையாக ஒரு வீட்டிற்கு ரூ.3,000/- வீதம் ரூ.11,32,47,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாளை முதல் முன்பு அறிவித்தப்படி இதற்கான நிவாரணத் தொகை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், வீடுகள் சேதமடைந்த பொதுமக்களுக்கும் வழங்கப்படும்.

## Press- release

Rs. 18,11,47,495/- has been allotted as relief measure after calculating the damages at 8405.78 hectares till date in respect of Paddy, Groundnut, Tapioca, Sugarcane, Plantain, Palm Tree, Cashewnut Tree, Casuarinas, Beetle leaf, crops, vegetables, fruit farm and flower plants for the farmers affected by the cyclone through the Agriculture Department, Puducherry. Similarly, for Karaikal Region, Rs. 10,17,30,000/- has been allotted for the farmers of Karaikal in respect of Paddy, Vegetables, Plantain and Groundnut crops being the total damages at 5084.76 hectares so far.

In the same way, Rs. 25,08,60,000/- has been allotted as relief assistance for about 24,221 totally damaged houses, severely damaged houses and huts covering Puducherry and Oulgaret Taluks as assessed by the Revenue Department, Puducherry. Further, 26,65,55,000/- has been allotted as a relief assistance for about 26,635 totally, severely damaged houses and huts within the limits of Villianur & Bahour.

Similarly, in respect of Puducherry & Oulgaret Taluks 18,594 houses and 19,155 houses were partially damaged in Villianur & Bahour Taluks respectively after assessing till date for which an amount of Rs. 11,32,47,000/- has been allotted as relief measure at Rs. 3,000/- per house.

Hence, from tomorrow onwards (15.02.2012) as announced earlier the relief assistance will be distributed for the affected agriculturists as well as the people whose houses were damaged by the cyclone.